**பாலிந்தநுவர பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பாலிந்தநுவர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் பாலிந்தநுவர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் | | | |
| (i) 149 ஆம் பிரிவு | சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பதிவு செய்துள்ள ஹோட்டலுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் போது கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணக்கு | அந்த ஹோட்டலின் கணக்காய்வு நடவடிக்கைகள் இலங்கை இராணுவத்தின் மூலம் நிறைவேற்றப் | தொடர்புடைய பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறிக்கையில் குறிப்பிடப்பட்ட மொத்த வருமானத்தை அடிப்படையாகக் கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதற்குப் புறம்பாக சுற்றுலா சபையில் கணக்காளரால் தயாரிக்கப்பட்ட வருமான அறிக்கையை அடிப்படை யாகக் கொண்டு செயற்பாட்டு புரள்வில் ஒரு வீத தொகை அனுமதிப்பத்திர கட்டணமாக அறவிடப்பட்டிருந்தது. | பட்டிந்ததுடன் ஏனைய கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட வில்லை. | |
| (ii) | 159(1) ஆம் பிரிவு | 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் நிலுவையாகக் காணப்படுகின்ற ஆதனவரி உரிமையாளர்கள் 12 பேர்கள் தொடர்பாக நிலுவை ஆதனவரி அறவிடல் இறுதி கட்டமாக ஆதனங்கள் தடைசெய்யப்பட்டிருக்க வில்லை. | 12 பேர்களிடமிருந்து அறவிட வேண்டி உள்ளது. | - மேற்படி - |
| (ஆ) | 2021 செப்டெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| (i) | 2.1 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட குறிகாட்டிகளுக்கு இணங்க சங்கம் ஒன்றாக பிரதேச செயலாளரால் பரிந்துரை செய்யப்படாமல் மீளாய்வாண்டில் சங்கங்களுக்கு ரூபா 29.5 மில்லியன் செயற்திட்டம் கையளிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒப்பந்தம் கையளிக்கப்படும். | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2.2 ஆம் பந்தி | ஒரு சங்கத்திற்கு ஒரு சந்தர்ப்பத்தின் போது ரூபா 05 மில்லினை விஞ்சி செயற்திட்டம் கையளிக்கப்பட்டிருந்தது. | சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் முன்வராமையினால் சமூக அடிப்படையிலான சங்கங்களுக்கு வழங்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் ரூபா 05 மில்லியனை விஞ்சிய ஒப்பந்தங்கள் கையளிக்கப்படுவது இல்லை. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2018 திசம்பர் 31 ஆம் திகதிய இலக்கம் 04/2018 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 15 காணிகள் தொழில்சார் தகைமை பெற்ற மதிப்பீட்டாளரால் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சித் திணைக்களத்தால் அளவிடல் நடவடிக்கைகள் மேற்கொண்ட பின்னர் மதிப்பீடு செய்யப்படும். | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,643,976 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,738,191 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 1,177,000 | 1,044,980 | 846,638 | 378,980 | 2,565,000 | 2,336,530 | 2,131,424 | 725,118 |
| (ii) | வாடகை | 5,258,300 | 6,890,000 | 6,499,312 | 692,766 | 7,060,000 | 4,681,882 | 4,681,882 | 957,759 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,680,000 | 1,410,200 | 1,410,200 | 281,050 | 425,000 | 212,000 | 212,000 | 111,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 372,000 | 312,000 | 312,000 | - | 428,000 | 498,100 | 412,100 | 128,812 |
| | மொத்தம் | 8,487,300 | 9,657,180 | 9,068,150 | 1,352,796 | 10,478,000 | 7,728,512 | 7,437,406 | 1,922,689 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வாடகை** | | |
| (i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் மாக்கெலி எல்ல வாகனத் தரிப்பிடத்தில் வாடகை நிலுவை ரூபா 86,003 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) மாக்கெலி எல்ல பார்வையிடல் இடத்தை வாடகைக்கு வழங்குவதற்குரிய 2022 யூலை மாதம் முதல் 2022 திசம்பர் வரையான காலப் பகுதிக்கும் மற்றும் 2023 பெப்ரவரி முதல் 2023 யூலை வரையான காலப் பகுதிக்கும் உரிய நிலுவை வாடகை முறையே ரூபா 86,000 மற்றும் ரூபா 85,750 தொகைகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (iii) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் வாராந்த சந்தை வாடகை நிலுவை ரூபா 113,697 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 95,754 அதாவது 84 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (iv) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் இறைச்சிக்கடை வாடகை நிலுவை ரூபா 105,050 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | - மேற்படி - |
| (v) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் மீன்கடை நிலுவை வாடகை ரூபா 15,277 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் எந்தவொரு | நிலுவைப் 2024 ஆம் ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை | - மேற்படி - |

| | |
|---|---|
| தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்படும். |

**(ஆ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2023 திசம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 5,000,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 7,642,515 ஆகும். | 2023 ஆம் ஆண்டிற்குரிய பட்டோலைகள் தற்போது தயாரிக்கப்படுகின்றது. | - மேற்படி - |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகெலிஎல்ல பார்வையிடல் இடத்தை வாடகைக்கு வழங்குவதற்கு உரிய வாடகை உடன் படிக்கையின் இலக்கம் 07 இன் நிபந்தனையின் பிரகாரம் கேள்விதாரரிடமிருந்து 03 மாத பாதுகாப்பு பிணை வைப்பு பெற்றுக்கொள்வதற்கு பதிலாக ஒரு மாத வாடகைக்குரிய பிணை பணம் பெற்றுக்கொள்வதற்கும் உடன்படிக்கை இலக்கம் 21 நிபந்தனையின் பிரகாரம் நிலுவைப் பணம் செலுத்தாமை தொடர்பாக காலரீதியில் நடவடிக்கை எடுக்காமையினால் சபைக்கு ரூபா 171,750 நிதி நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 156 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்காக உடன்படிக்கை சரியாக தயாரிக்கப்படும். | தொடர்புடைய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஞாயிற்றுக்கிழமை சந்தை வாடகைக்கு வழங்குவதற்குரிய உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் மீளாய்வாண்டில் 05 மாதங்களில் நிலுவை வாடகை கூட்டு மொத்தமாக ரூபா 534,040 இனை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இந்த தொகையை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை உரிமை கோராடுகின்ற 08 காணிகளின் உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளைக் கையேற்பதற்காக அளவிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் அதற்குத் தேவையான நிதி ஏற்பாடு உள்ளூராட்சித் திணைக்களத்திலிருந்து கோரப்பட்டுள்ளது. | உரிமை கோராடுகின்ற காணிகளின் உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2006 ஏப்ரல் 15 ஆந் திகதி பாலிந்தநுவர பிரதேச சபை ஸ்தாபிக்கும் போது உரித்தாக இருந்த 04 காணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | இந்த 04 காணிகள் தொடர்பான தகவல்கள் வழங்குமாறு பிரதேச செயலகத்தில் கோரப்பட்டுள்ளது. | சபைக்கு சொந்தமான காணிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1946 இன் 57 ஆம் இலக்க பொது மயான நிலங்கள் மற்றும் தனியார் மயான நிலங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் மயான நிலங்களின் பாதுகாப் பிற்காக பாதுகாப்பு வேலி எல்லை அமைக்க வேண்டியிருந்த போதிலும் சபைக்குரிய எந்த வொரு மயான நிலங்களுக்கும் வேலி எல்லை அமைக்கப்பட்டிருக்கவில்லை. | மயான நிலங்களின் அளவிடல் நடவடிக்கைகள் மேற்கொண்டு கையேற்கப்பட்ட பின்னர் வேலி எல்லை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்புடைய சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பாலிந்தநுவர பிரதேச சபையின் நிருவாகத்தின் கீழ் உள்ள 30 மயான நிலங்களின் உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சித் திணைக்களத்திலிருந்து நிதி ஏற்பாடு கிடைத்த பின்னர் அலுவல் நடவடிக்கைகளை மேற்கொண்டு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மயான நிலங்களின் உரித்தை சபையினால் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 பெப்ரவரி மாதம் வரையில் உடுவன் கந்கந்த கபுகெதர பிரதேசத்தில் நீர் செயற்திட்டம் மூலம் குழாய் நீர் பதித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மக்களின் குடிநீர் தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 10 இலட்சம் நிதி ஏற்பாடு கிடைத்திருந்ததுடன் அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | மக்களின் குடிநீர் தேவையினை விரைவாக நிறைவேற்றுதல் வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் இன்றி 2020 ஆம் ஆண்டு முதல் சேர்க்கப்பட்ட 33 ஊழியர்களுக்காக 2022 ஆம் ஆண்டு வரை உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து சம்பளம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் நடப்பாண்டில் சம்பளம் சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. | இந்த ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் உள்ளடங்காமையால் நிதிப்பிரமாணம் 71 இன் பிரகாரம் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. | பதவியணியினருக்காக அங்கீகாரத்தைப் பெற்று அதன் பிரகாரம் ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தி சம்பளம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 2022 நவம்பர் மாதம் முதல் பாலிந்தநுவர பிரதேச சபையில் இருந்து களுத்துறை சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தரிட மிருந்து ரூபா 202,496 கடன் மீதியில் எந்தவெரு தொகையும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கடன் மீதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடம் இருந்து கிடைக்க வேண்டிய கடன் மீதி விரைவாக தீர்த்துவைக்கப் படல் வேண்டும். |